# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **CHROMPET** Weekly News Paper www.gstroadnews.com

Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar

Vol:13 Issue - 34 07 Dec 2025 - 13 Dec 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902


## தங்கம் விலை மீண்டும் உயர்வு

தங்கத்தின் விலை ரூ.320 அதிகரித்துள்ளது. ஒரு சவரன் தங்கம் ரூ.96,320 க்கும், கிராமுக்கு ரூ.40 அதிகரித்து, ஒரு கிராம் தங்கம் ரூ.12,040க்கு விற்பனையாகிறது.


FLAT FOR RESALE
@CHROMEPET
CHITLAPAKKAM
NR NELLAI SUPER MARKET
G.FOOR 822 sqft
UDS-543.72
F.FLOOR-978 sqft
UDS-646.91
90035 29020
95000 35454

FLATS FOR SALE
@ CHROMEPET NEW COLONY
3BHK -1709 Sqft
READY FOR OCCUPATION
AMENITIES:
☞ COVERED CAR PARKING
☞ LIFT, ☞ VAASTHU
☞ LUXURY FINISH
ASV LIFE SPACES
98842 80255



பழைய பட்டுப்புடவை
வெள்ளி ஜரிகை காஞ்சிபுரம் மில் விலைக்கு வாங்கப்படும்
WE BUY OLD KANCHIPURAM SILK SAREES, OLD PATTU SAREES MYSORE SILKS, BANARAS ALL ZARI ITEMS
SPOT CASH FREE DOORSTEP
CHROMPET PATTU CENTER NEW COLONY- CLC Work Road, Chrompet
99401 83605 / 98406 58189

SHIKSHAA PUBLIC SCHOOL
Best CBSE School in Chromepet
ISO CERTIFIED
FIND THE GENIUS
A TALENT SEARCH EXAM 2026 –2027
ELIGIBILITY: STUDENTS PRESENTLY STUDYING IN LKG TO GRADE VIII
OPEN ONLY FOR EXTERNAL STUDENTS (NOT APPLICABLE FOR EXISTING OR NEWLY ADMITTED SPS STUDENTS).
EXAM DATE: 13/12/2025
LAST DATE FOR REGISTRATION: 11/12/2025
EXAM DETAILS
DURATION: 90 MINS
EXAM PATTERN: MCQ TYPE
TIMING: 09:30 A.M. TO 11:00 A.M.
VENUE: SHIKSHAA PUBLIC SCHOOL
SCHOLARSHIP DETAILS
STUDENTS WHO SECURED
90% and above - 50% (ADMISSION & TERM FEES)
80% and above - 30% (ADMISSION & TERM FEES)
70% and above - 20% (ADMISSION & TERM FEES)
ALL PARTICIPANTS WHO ENROLL IMMEDIATELY WILL RECEIVE A 30% CONCESSION ON THE ADMISSION FEES.





SCAN TO REGISTER
* CONCESSIONS ARE ONLY FOR ENROLMENT IN FIRST YEAR
MODE OF REGISTRATION: WHATSAPP AND EMAIL
+91 - 91764 07863
+91 - 93450 21509
8122937040
competition@sps.edu.in
(NO.8 PONNIAMMAN KOIL STREET, HASTHINAPURAM, CH-64) (CBSE AFFILIATION NO:1930842)

PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School




READY TO MOVE
3 BHK-1240 Sqft
2 BHK-980 Sqft
☑ Lift ☑ CCP ☑ CCTV ☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585

INDIVIDUAL DUPLEX HOUSE FOR SALE
@ CHROMEPET MC NAGAR, HASTHINAPURAM
NR.SAI BABA TEMPLE
3 BHK- 3 VILLAS
Build area 2106,2171,2138
2 Car Parking, Balcony
Lift , North facing



SRI RAGAVA BUILDERS
63801 02672 / 70101 67065

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE
@ CHROMPET
3 BHK
AS PER VASTHU, CCP, LOAN ARRANGED



SITE ADDRESS :
HASTHINAPURAM, SARASWATHI NAGAR
NR. THIRUMALAI NAGAR, ZION SCHOOL
MANICKAM CONSTRUCTION
OFF.ADDRESS: PLOT NO.37, 7TH MAIN ROAD, VINOBAJI NAGAR, HASTHINAPURAM, CHENNAI - 64.
94442 14382
94442 55004

FLATS FOR SALE
@CHROMPET
NEXT TO NSN SCHOOL RP ROAD
NEAR MIT & KUMARAKUNDRAM KOIL
2 & 3 BHK
933 - 1053 - 1450 Sqft
ONLY 3 UNITS LEFT
AMENITIES:
* LIFT * CCTV
* CCP * VASTHU
* VIDEO DOOR PHONE
JETTAA'S VISHAKA
READY TO MOVE



JETTAA BUILDERS
80150 59333 / 96267 72679
Jettaabuilders@gmail.com / jettaabuildersprivatelimited@gmail.com

PREMIUM 2&3 BHK FLATS
@ CHROMPET-NR, RP ROAD



VIVEKANANDHA
NSN SCHOOLS
AMENITIES
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Modern Design
Ev Charger Point
NO GST CHARGES
JSV CONSTRUCTIONS
For Booking : 86680 05226 | 98410 86446
HASTHINAPURAM, CHENNAI- 600 044

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
24 HRS POWER BACKUP*




4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
24 HRS POWER BACKUP*




4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
24 HRS POWER BACKUP*




3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD HDFC BANK SBI

# சபரிமலை இந்தியாவின் மிகச் சிறந்த ஆன்மீக யாத்திரைத் தலமாக ஏன் கருதப்படுகிறது?

சபரிமலை ஒரு கோவில் மரபு, ஒற்றுமை, பக்தி, தியாகம், மத நல்லிணக்கம் என அனைத்தையும் தன்னகத்தே கொண்ட அற்புத புனிதத் தலம். பல நூற்றாண்டுகளாக பக்தர்களின் நம்பிக்கையை தாங்கி நிற்கும் இந்த மலை, இன்று உலகின் மிகத் தனித்துவமான ஆன்மீக மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. வருடந்தோறும் 40,50 மில்லியன் பக்தர்கள் யாத்திரை செய்யும் இடம். மெக்காவிற்கு அடுத்த மிகப்பெரிய மதப் பயணம். சைவ, வைணவ ஒற்றுமையின் அழகிய வடிவம் தான் சபரிமலை. மதுரை அரச குடும்ப வரலாற்றோடு இணைந்த மணிகண்டன் அவதாரம், பந்தள அரசரின் அரண்மனையில் வளர்ந்து, 12 வயதில் தன் அவதார நோக்கத்தை முடித்த பின்பு சென்றதியான நிலையே இன்று நாம் தரிசிக்கும் சன்னிதானம்.



பந்தள வம்சத்திற்கான மரபுகள், இருமுடிபாரம், திருவாபரண பெட்டி போன்ற புனித சடங்கு கள் சபரிமலையின் நெடுந்தொடர் மரபுகள். இந்து சன்னதியுடன் இணைந்த ஒரே முஸ்லிம் சன்னதி, வாவர் சுவாமி. மத நல்லிணக்கத்தின் சிறந்த எடுத்துக்காட்டு. உலகம் முழுவதும் பக்தர்களை மயக்கும் "ஹரிவராசனம்" பாடல் தென்னகத்தைச் சேர்ந்த கம்பங்குடி ஸ்ரீ குலத்துஐயரின் படைப்பு. 1894 இலக்கியங்களிலிருந்தே சபரிமலையாத்திரை குறிப்பிடப்பட்டுள்ளது. 1950 தீவிபத்துக்குப் பிறகு தேவபிரசன்னம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கும்பகோணச் சிற்பிகள் உருவாக்கிய தற்போதைய விக்கிரகம். சபரிமலையில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமெனில் முதலில் "தேவபிரசன்னம்" செய்ய வேண்டும். இது கேரள கோவில் மரபின் அடையாளம். தமிழகத்தின் சாஸ்தா, அய்யனார் வழிபாடு கலந்த விரத முறையும், அன்னதான மரபும், சபரிமலையின் தனிச் சிறப்பு. சாதி, பணக்காரர், ஏழை என்ற பேதமே இல்லை. அனைவரும் "சாமி" என்ற ஒரே நிலை. 41 நாட்கள் கடுமையான விரதம், 60 கிலோமீட்டர் நடைபயணம், அடர்ந்த காட்டுப்பாதை சபரிமலையில் மட்டும் காணப்படும். தமிழ், கேரள கலாசாரங் களின் ஆன்மீக இணைப்பு. குரு வழியாக மட்டுமே ஐயப்பனை அடைய வேண்டும் என்ற மணிகண்டனின் எண்ணம் காரணமாக குரு சாமி மரபு இன்று வரை தொடர்கிறது.

ஆண்டில் மொத்தம் 120 நாட்கள் மட்டும் திறக்கும் அரியகோவில். தமிழ்நாட்டில் சபரிமலை யாத்திரை பரவுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, வீரமணி சோமு, கே. வீரமணி, மற்றும் புனலூர் தாத்தா போன்றோர். யாத்திரை வழியில் வாவர் மசூதியில் வணங்கும் மரபு இந்தியாவில் வேறு எந்த கோவிலிலும் இல்லை. கும்பாபிஷேகம் இல்லை, பக்தர்களின் நம்பிக்கையால் ஆண்டுதோறும் சன்னிதானத்தின் சைதன்யம் கூடுகிறது என நம்பப்படுகிறது. பரசுராமர் பிரதிஷ்டை செய்த ஆலயம், பந்தள அரசரால் உருவாக்கப்பட்ட பதினெட்டுபடிகள், வீரப் பட்டம் மரபு, மாளிகைப் புறத்து அம்மன் சன்னதி, அனைத்தும் சபரிமலையின் புனித வரலாற்றின் அங்கங்கள்.

# திருநீற்றுப்பச்சிலை இலை... அகத்திய முனிவர் சொன்ன ரகசியம்!

சப்ஜா விதைகள் என்றழைக்கப்படும் திருநீற்றுப்பச்சிலை என்பது துளசி வகையை சார்ந்ததாகும். இது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் பெரிய பங்கு வகிக்கிறது. இந்த திருநீற்றுப்பச்சிலையின் பூக் கள் வெள்ளை நிறத்திலும், இதன் விதைகள் இனிப்பு சுவையிலும் இருக்கும். இதன் செடிகள் கார்ப்பு சுவையை கொண்டிருக்கும். சளி, இருமல் போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு திருநீற்றுப்பச்சிலை மிகச் சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதன் இலைகளில் உள்ள அத்தியாவசிய எண்ணெய்கள், சளியை வெளியேற்றும் மற்றும் அழற்சிக்கு எதிரான பண்புகளைக் கொண்டுள்ளன. இந்த இலை வாந்தி, கபநோய்களை குணப்படுத்தும் என்று அகத்திய முனிவர் கூறியிருக்கிறார்.

**உடல் ரீதியான ஆரோக்கியம்:**

1.இதன் இலைகளை மென்று சாப்பிடுவது அல்லது தேநீரில் சேர்த்து அருந்துவது செரிமான மண்டலத்தை சீராக்க உதவுகிறது. வயிற்று உப்புசம், அஜீரணம் போன்ற பிரச்னைகள் நீங்கும். 2. திருநீற்றுப்பச்சிலை சாறு, காய்ச்சலின்போது ஏற்ப



டும் உடல் வலியைப் போக்கவும், நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடவும் உடலுக்கு பலம் அளிக்கிறது. 3. இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து, அடிக்கடி வரும் நோய்களில் இருந்து பாதுகாக்கிறது. 4. உஷ்ணத்தினால் ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர் எரிச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைத் தீர்க்கும். 5. குளிக்கும் போது அரைமணி நேரத்திற்கு முன்பே இந்த இலைகளை நீரில் போட்டு ஊறவைத்த பின் குழித்தால், வேர்வை துர்நாற்றம் நீங்கும். 6. இந்த இலைகளை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி நீங்கும். 7. இது கண்கட்டி, முகப்பரு, தேமல், காது கோளாறு போன்றவற்றையும் சரிசெய் கிறது.

**மன அழுத்தத்தையும் போக்கும்**

திருநீற்றுப்பச்சிலையின் மகத்துவமே அதன் மனதை அமைதிப்படுத்தும் பண்பில் தான் அடங்கியுள்ளது. இது ஒரு இயற்கையான அடாப்டோஜென் ஆகச் செயல்படுகிறது. அதாவது, மன அழுத்தம் அல்லது பதற்றம் போன்ற உடல் மற்றும் மன ரீதியான அழுத்தங்களைச் சமாளிக்க இது உதவுகிறது.

1. இதன் இனிமையான வாசனையும், இலைகளில் உள்ள குறிப்பிட்ட சேர்மங்களும் நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி, தேவையற்ற பதற்றத்தைக் குறைக்க உதவுகிறது. 2. தொடர்ந்து திருநீற்றுப்பச்சிலையை உட் கொள்வது மனதின் தெளிவை மேம்படுத்தி, நினைவாற்றல் மற்றும் கவனத்தை அதிகரிக்கச் செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 3. மனச்சோர்வு போன்ற பிரச்னைகள் உள்ளவர்களுக்கு இது ஒரு துணை மருந்தாகச் செயல்பட்டு, ஒட்டு மொத்த மனநிலையை மேம்படுத்த உதவுகிறது. சளி, இருமல் நிவாரணியாக மட்டுமின்றி, இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளவும் திருநீற்றுப்பச்சிலை உதவுகிறது. இதை தினமும் தேநீராகவோ அல்லது உணவில் சேர்த்தோ பயன்படுத்தி, அதன் முழுப்பலனையும் பெறலாம்.

# கஷ்டங்களை தீர்க்கும் கார்த்திகை தேய்பிறை சஷ்டி

முருகப்பெருமானுக்கு விரதமிருக்க உகந்த திதியாக சஷ்டிதிதி கருதப்படுகிறது. ஏனெனில், சஷ்டியில் விரதம் இருந்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பதையடுத்து, கார்த்திகை தேய்பிறை சஷ்டி விரதத்தின் பலன்கள் குறித்து அறிந்திடலாம்.

**சஷ்டி சிறப்பு**

6 தீப்பொறிகளில் இருந்து முருகப்பெருமான் தோன்றியதால், அவருக்கு எல்லாமே 6 என்ற அடிப்படையிலேயே உள்ளது. முருகனின் மந்திரம் 6 அட்சரங்கள் கொண்ட சரவணபவ என்பதாகும். முருகனுக்குரிய சொந்த வீடுகளாக 6 படை வீடுகள் கருதப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் விட 6 கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்ட முருகனை, அன்னை பார்வதி ஒன்றிணைத்த போது 6 முகங்கள் கொண்டவராக முருகப் பெருமான் திகழ்ந்தார். ஜாதக ரீதியாகவும் 6ஆம் இடம் கடன், விரோதம், சத்ரு போன்றவைகளை குறிக்கின்ற நிலையில், இவைகளை எல்லாம், ஒரு நொடியில் போக்குபவராக முருகன் திகழ்கின்றார். இவ்வாறாக 6ஆம் எண்ணுக்குரியவராக முருகன் இருப்பதாலேயே, திதி களிலும் 6வது திதியான சஷ்டிதிதி முருகனுக்குரியதாக



உள்ளது. அதனால் தான், சஷ்டி திதி நாளில் முருகப்பெருமானை நினைத்து விரதம் இருந்து வணங்கிட அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார். இன்றைய கார்த்திகை தேய்பிறை சஷ்டியன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து, வள்ளி, தெய்வானையுடன் இருக்கும் முருகன் படத்திற்கு மனமுள்ள மலர்களை சாற்ற வேண்டும். நெய் அல்லது நல்லெண்ணெய் கொண்டு விளக்கேற்றி ஏதாவது இனிப்புகளை நைவேத்தியம் செய்திட வேண்டும். இந்நாளில் காலை முதல் மாலை வரை விரதமிருந்து, கந்த சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை பாடி வணங்க வேண்டும். மாலையில் அருகில் இருக்கும் கோயிலுக்கு சென்று முருகப்பெருமானை வணங்கி வீடு திரும்பியதும் விரதத்தை முடிக்கலாம். அவ்வாறு விரதமிருந்து வழிபட தடை பட்டு வரும் திருமணம் நல்ல வரன் கிடைத்து விரைவில் நடைபெறும். குழந்தைப் பேறு இல்லாத வர்களுக்கு குழந்தை கிடைக்கும். தொடங்கும் காரியங்களில் வெற்றி கிடைக்கும், தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

# கார்த்திகை மாத நவமி வழிபாடு:

நவமி திதி சீதா, ருக்மிணி, அண்ண பூர்ணேஸ்வரி, லட்சுமி நாராயணி அருளுக்கான முக்கிய காலம். கார்த்திகை மாதத்தில் நவமி வருவது வீட்டில் ஆறுதல், செல்வ நலம், பிள்ளைப் பரிபூர ணம் போன்றவற்றை அளிக்கும்.

**செய்ய வேண்டிய வழிபாடு:** குங்குமம்–சந்தனம் கலந்த நீரால் அபிஷேகம் செய்து, சந்நிதியில் நெய்யால் தீபம் ஏற்றல். லட்சுமி அஷ்டோத்திரம், அண்ணபூர்ணேஸ்வரி ஸ்தோத்திரம், நாராயணி ஸ்தோத்திரம் ஜபம். அக்கார வடிசல், பால்சாதம், சர்க்கரை பொங்கல் போன்ற நெய்வேத்யம் சமர்ப்பிக் கலாம். நவரசதேவியை குறிக்கும்



ஒன்பது வகையான மலர்கள் அல்லது தீபங்கள் ஏற்றுவது மிகுந்த புண்ணியம். வீட்டில் மாணவர்கள் சரஸ்வதி தியானம் செய்தால் படிப்புத்திறன் மேம்படும். பெண்கள் ஒன்பது சுமங்கலிகளுக்கு பெண்களுக்கு தாம்பூலம் கொடுத்தால் சௌபாக்கியம் பெருகும்.

**நவமி வழிபாட்டின் பலன்கள்:**

செல்வவளம், வியாபார வளர்ச்சி, மன அமைதி, குடும்ப ஒற்றுமை, பிள்ளைப்பேரின் பம், கல்வி மேம்பாடு, மனக் கஷ்டம், பசி பாரத்துன்பம் நீக்கம், வீட்டில் அண்ணபூர்ணேஸ்வரி அருள் அதிகரிக்கும்.


# CLASSIFIEDS

## RENTAL

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

IND HOUSE FOR SALE
@ PALLAVARAM
DHARGAS ROAD
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP

FLATS FOR SALE
@ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

## NEW FLAT SALE

NEW FLATS FOR SALE
@CHROMPET
PATEL STREET- NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
2 BHK WITH STUDY ROOM
& CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

## FLAT RESALE

FLAT FOR RESALES
@CHROMPET
@ HASTINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD, 1st FLOOR
LIFT, CCP
80722 30451

FLAT FOR RESALE
@CHROMEPET
KAMALA STREET
BHEEMA FLATS (AVITTAM BHISHMA)
VERY NEAR TO NSN, VIVEKANANDA SCHOOLS
KUMARAN KUNDRAM
2 BHK 835 Sqft
LIFT & CAR PARKING
96001 99216
70101 42900

FLATS FOR SALE
@ CHROMPET
HASTHINAPURAM
2BHK-850 Sqft ,450UDS
42 LAKHS
FIRST FLOOR / CAR PARKING
99620 03409

FLAT FOR RESALE
@KRISHNA NAGAR
893 Sqft 628 UDS Sqft
LIFT, CCP

IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

## PLOT SALE

PLOTS FOR SALE
@MANNIVAKKAM
NEAR RUBI MULTI BUILDING
1800 Sqft x 5 Plots.
₹4500 per sqft
CMDA Approved
72007 11009


# தூக்கத்தில் வந்த நல்ல கனவுகள் நிஜமாவதற்கு எந்த வழிபாடு துணை நிற்கும்?

உங்கள் உழைப்பு ஒன்றுதான் துணைநிற்கும். கனவுகள் என்பது ஆழ்மனதில் உள்ள எண்ணங்களின் வெளிப்பாடு. உறக்கத்தில் இருந்து எழும்போதே அது கலைந்துவிடும். அந்த கனவுகள் மறந்தும் போய்விடும். அதையும் தாண்டி கனவுகள் நம் நினைவில் நிற்கிறது என்றால் அது நம் மனதில் உள்ள ஆசைகளின் வெளிப்பாடே ஆகும். அந்த எண்ணங்கள் நிறைவேற வேண்டும் என்றால் அதற்கு உங்களின் உண்மையான உழைப்புதான் துணையிருக்கும். அந்த உழைப்போடு உங்கள் இஷ்ட தெய்வத்தின் அருளும் இணையும்போது கனவு என்பது மெய்ப்படுகிறது.

# கிருஷ்ணருக்கு மிகவும் பிடித்த மலர் கிருஷ்ண கமலம்



நாகலிங்க மலரில் எப்படி சிவபெருமான் வாசம் செய்கி றாரோ அதே போல கிருஷ்ணர் வாசம் செய்யக் கூடிய மலர் கிருஷ்ண கமலம்..

இந்த பூவின் அமைப்பு நடுவில் திரௌபதி, மும் மூர்த்திகள், பஞ்ச பாண்டவர்கள், 100கௌ ரவர்கள் என அனைவரும் கிருஷ்ணரோடு சேர்ந்து வாசம் செய்யக் கூடிய மலர். கிருஷ்ணர் கையில் உள்ள சுதர்சன சக்கரத்துக்கு நிகராக இந்த மலரை குறிப்பிடுகிறார்கள். இந்த பூவின் பெயர் கிருஷ்ண கமலம், இதனை மஹாபாரத பூ, பஞ்ச பாண்டவர் பூ என்றும் அழைப்பார்கள். இதன் ஆங்கில பெயர் (KRISHNA KAMAL, PASSION FLOWER). கிருஷ்ணரை இஷ்ட தெய்வமாக கொண்டவர்கள், கிருஷ்ணரை நடுநாயகனாக வைத்து வழிபடுவர்கள் இந்த செடியை கண்டிப்பாக வீட்டில் வளர்க்கவும். வீட்டிற்குள் அதிகப்படியான நேர்மறை ஆற்றலை ஈர்க்கும் (Positive Vibrations) நறுமணமான மலர். இது ஒரு கொடி வகையை சேர்ந்தது. சிறிய தொட்டியில் வைத்தும் வளர்க்கலாம். அதிக இட வசதி, அதிகமாக வெயில் தேவையில்லை. இந்த பூவை கிருஷ்ணருக்கு மாலையாக கட்டி அணிவிக்கலாம், அலங்கரிக்கலாம். பெங்களூர் இஸ்கான் கிருஷ்ணன் கோவி லில் கிருஷ்ணர் கையில் இந்த மலரை வைத்து இருக்கிறார். இந்த செடியின் அருகில் துளசிசெடி, துளசிமாடம் நட்டு வளர்ப்பது கூடுதல் பலனையும், அதிர்ஷ்டத்தையும் வீட்டிற்கு கொடுக்கும். பர்பிள் நிறம் நம் உடலில் உள்ள சஹஸ்ர சக்கரத்தோடு தொடர்புடையது (Crown Chakra). வீட்டில் நட்டு வளர்த்து கிருஷ்ணனின் அருளை பெறவும்.

# சபரி ஆசிரமம் - 25 ஆம் ஆண்டு - ஐயப்ப பூஜை, இலட்சார்ச்சனை, அன்னதானம்நடைபெற்றது







குரோம்பேட்டை விவேகானந்தா தெரு காந்திஜி நகரில் அமைந்துள்ள சபரி ஆசிரமம் 25ஆம் ஆண்டு லட்சார்ச்சனை மற்றும் அன்னதானம் குரோம்பேட்டை ராதாநகர், இந்திரா காந்தி குறுக்குத் தெருவில் அமைந்துள்ள குரோம்பேட்டை கல்சுரல் அகாடமியில் நடைபெற்றது. காலை 5:30 மணி அளவில் கணபதி ஹோமம், 6:30 மணி அளவில் லலிதா சகஸ்ரநாம பாராயணம், 9 மணி அளவில் ஐயப்பன் லட்ச் அர்ச்சனை, 11.15 மணியளவில் தீபாதாரணை, 11.30 மணி அளவில் சென்னை ஸ்ரீ ஆதித்யா ராஜேஷ் குழுவினரின் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சி,2.30. மணி அளவில் சிறப்பு மகா தீபாதாரணையும் காலை 10 மணி முதல் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது. விழாவில் குருசாமி சுபஸ்ரீ பாலு பூஜைகளை துவக்கி வைத்தார். ஐயப்ப பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை சபரி ஆசிரமம் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 38 வது வார்டு பத்மநாப நகரில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர். இதில் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் சீதா தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## எங்கள் ஆட்சியில் தீபம் ஏற்றுவோம் அதிமுக

2026ல் அதிமுக ஆட்சி மலர்ந்ததும் திருப்பரங் குன்றத்தில் தீபம் ஏற்றப்படும் என்று அதிமுக அமைப்புச் செயலாளரும், திருப்பரங் குன்றம் எம்எல்ஏவுமான வி.வி.ராஜன் செல்லப்பா கூறினார். மதுரையில் செய்தி யாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: மதுரைக்கு திமுக அரசு எந்த திட்டத்தையும் கொண்டுவரவில்லை. தற்போது முதல்வர் திடீரென மதுரையின் வளர்ச்சி பற்றி பேசுவது வியப்பளிக்கிறது. திருப்பரங்குன்றத்தில் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர் என்றார்.

## இலங்கைக்கு கப்பலில் நிவாரணப் பொருள்கள் கொடியசைத்து அனுப்பி வைத்த மு.க. ஸ்டாலின்

டிட்வா புயல் காரணமாக கன மழை பெய்து, அதனால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் கப்பல் மூலம் நிவாரணப் பொருள்களை முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

## தமிழ்நாட்டுக்கு மீண்டும் புயல் எப்போது உருவாகும்?

இந்த மாத மத்தியில் தமிழகத்தில் மீண்டும் புயல் உருவாக வாய்ப்பு உள்ளது. இது பற்றி தனியார் வானிலை ஆய்வாளர் ஹேமசந்தர் கூறியதாவது: தமிழ்நாட்டில் வருகிற 10ந் தேதிக்கு பிறகு மீண்டும் பருவமழை தீவிரமாகும். 15 ந்தேதியும் 17 ந் தேதியும் புயல் உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அப்போது தென்மாவட்டங்களிலும் மற்ற பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றார்.




உ

ஸ்வாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ கருமாரி அம்மன் பக்த ஜனசபை

பத்மநாப நகர், குரோம்பேட்டை, சென்னை - 44.

ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி 50ம் ஆண்டு விளக்கு பூஜை

7-12-2025 ஞாயிற்றுக்கிழமை

நிகழ்ச்சி நிரல்

காலை 6.00 மணி ஸ்ரீ மஹா கணபதி ஹோமம்
காலை 8.00 மணி ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமிக்கு சிறப்பு அபிஷேகம்
காலை 9.30 மணி சகஸ்ரநாம அர்ச்சனை முதல் காலம்
காலை 11.00 மணி சகஸ்ரநாம அர்ச்சனை இரண்டாம் காலம்
பகல் 12.00 மணி பஞ்சவாத்தியம்
பகல் 12.30 மணி மஹா தீபாராதனை
பகல் 12.45 மணி அன்னதானம்
மாலை 6.30 மணி பொழிச்சலூர் நடிகர் R.சண்முகம் அவர்களின் பக்தி பாடல்கள்
இரவு 7.00 மணி அஸ்தினாபுரம் ஸ்ரீ சதுர்குன்று விநாயகர் ஆலயத்திலிருந்து ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி பஞ்ச வாத்தியங்களுடன் திருவீதி உலா புறப்படுதல்
இரவு 9.00 மணி தீபாராதனை மற்றும் அன்னதானம்

இரவு 9.00 மணி அளவில் சிறப்பு அழைப்பாளர்கள் :
திரு. இ. கருணாநிதி MLA அவர்கள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. இ. ஜோசப் அண்ணாதுரை MC அவர்கள் 2வது மண்டல தலைவர், தாம்பரம் மாநகராட்சி
திரு. ஏ.கே. கருணாகரன் அவர்கள் தொழிலதிபர், மகாலட்சுமி பெட்ரோல் பங்க் உரிமையாளர்
திருமதி. சரண்யா மதுரைவீரன் MC அவர்கள் 38வது வார்டு மாமன்ற உறுப்பினர், தாம்பரம் மாநகராட்சி
திரு. க. ரமேஷ் அவர்கள் முன்னாள் நகரமன்ற உறுப்பினர், பல்லவபுரம் நகராட்சி

அலங்காரம் : "அலங்கார ரத்னம்"சிவஸ்ரீ B.கணேச குருக்கள், ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயம்

ஸ்ரீ கருமாரி அம்மன் பக்த ஜன சபை நிர்வாகிகள்

தலைவர் : R.சத்தியசேகரன்
துணைத்தலைவர் : S.வெங்கடேஸ்வரன்
செயலாளர் : R.வரதகவுண்டர்
உதவி செயலாளர் : K.தியாகராஜன்
பொருளாளர் : C.S.முரளி மனோகரன்
உதவி பொருளாளர் : H.கார்த்திகேயன்
அமைப்பு செயலாளர் : V.ராமமூர்த்தி
தணிக்கையாளர் : V.சங்கர் கணேஷ்

செயற்குழு உறுப்பினர்கள்
R.லக்ஷ்மணன் R.பரசுராமன்
M.பாலகிருஷ்ணன் R.நாராயணன்
K.நரசிம்மன் K.மாணிக்கவாசகன்
G.பாஸ்கரன் B.பாலசந்தர்
K.காமராஜ் T.சீனிவாசன்
M.கன்னியம்மாள் "நர்சரி" K.வெங்கடேசன்

சகஸ்ரநாம அர்ச்சனை ரூ.200/-
அன்பர்கள் வருக! ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி அருள் பெறுக!!

அன்புடன்
திருவிழா குழுவினர்


## தமிழகம் மீது புதின் அக்கறை!

'இந்தியா, ரஷ்யா இடையிலான இருதரப்பு விஷயங்கள் முழு அளவில் விவாதிக்கப்பட்டது. இந்தியாவுக்கு காஸ், எண்ணெய், நிலக்கரி சப்ளை செய்வதில் ரஷ்யா முக்கிய நாடாக உள்ளது'. 'தமிழகத்தில் முக்கிய திட்டத்தை இரு நாடுகளும் இணைந்து செயல் படுத்துகிறோம். கூடன்குளம் அணுமின் நிலையம் மேலும் மேம்படுத்தப்படும். இதன் மூலம் இந்தியர்கள் மிக மலிவான விலையில் மின் சக்தியை பயன்படுத்தலாம் டில்லியில் ரஷ்ய அதிபர் புடின் பேட்டி கூடன்குளத்தில் உள்ள 6 உலைகளில் தற்போது இரண்டில் மின் உற்பத்தி நடக்கிறது. 3வது உலைக்கான யுரேனியம் எரிபொருள் விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

## கர்ப்பகாலத்தில் 'சர்க்கரை' நோய்

கர்ப்ப காலத்திலும் பெண்களுக்கு சர்க்கரை நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. இது சர்க்கரை நோய் மருத்துவத்தில் "கர்ப்பகால சர்க்கரை நோய்" என அழைக்கப்படுகிறது. கர்ப்ப காலத்தில் சிலருக்குப் போதிய இன்சுலின் சுரப்பதில்லை. அதனால் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கிறது. தாய், கருவில் உள்ள குழந்தையை கர்ப்பகால சர்க்கரை நோய் பாதிக்கும்.

### பாதிப்பு என்ன?:

பெண்கள் 30 வயதுக்கு மேல் கர்ப்பம் அடைதல், அதிக எடை உள்ள பெண்கள், முந்தைய கர்ப்பகாலத்தில் ஏற்கெனவே சர்க்கரை நோய் இருந்தாலோ, மனநல நோய் அல்லது ஸ்டீராய்ட் மருந்து உட்கொண்டிருந்தாலோ அல்லது குடும்பத்தில் யாருக்கேனும் சர்க்கரை நோய் பிரச்னை இருந்தாலோ அவர்களுக்குச் சர்க்கரை நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தால், அது பெரும் அளவில் மூச்சுத் திணறல், சுவாசக் கோளாறு பிரச்னைகளை ஏற்படுத்தும். குழந்தைகளுக்கு "ஹைப்போகிளைசிமியா' (தாழ் சர்க்கரை நிலை) பாதிப்பு ஏற்படும். சில குழந்தைகளுக்கு இதய நோய் பிரச்னை ஏற்படும். சில குழந்தைகளுக்குப் பிற் காலத்தில் சர்க்கரை நோய் ஏற்படலாம். சர்க்கரை நோய் காரணமாக குழந்தை உருவாகும் போது கர்ப்பிணிக்கு தொப்புள் கொடியில் பிரச்னை ஏற்பட வாய்ப்பு உண்டு. குழந்தை பிறக்கும் போது 4 கிலோவுக்கும் அதிகமான எடை கொண்டதாக இருக்கும். குழந்தை பிறக்கும் போது நுரையீரல் சரியாக வளர்ச்சி அடையாமல் சுவாசக் கோளாறு ஏற்படக் கூடும். குழந்தை மஞ்சள் காமாலை யுடன் பிறக்கலாம். கர்ப்ப காலத்தில் ரத்தத்தில் அதிக சர்க்கரை இருந்தால் ஆபத்தான பிரச்னைகள் ஏற்படாமல் இருக்க சில பரிந்துரைகள், கர்ப்பம் அடைந்தவுடன் முதல் முறையாக பரிசோதனைக்கு வரும்போது இரண்டாம் வகை சர்க்கரை நோய் உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்து கொள்ளவும். சர்க்கரை நோய் இல்லையென்றாலும் கர்ப்பம் அடைந்து 24 வாரங் களில் மீண்டும் சர்க்கரை நோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கர்ப்ப கால சர்க்கரை நோய் இருந்தால் பழங்கள், காய்கறிகள், முழுமையான தானியங்கள், பருப்புகளை மருத்துவர் கூறிய அளவில்தான் சாப்பிட வேண்டும். "பாலீஷ்' செய்யப்பட்ட தானியங்களைச் சாப்பிடக் கூடாது. நேரடியாக சர்க்கரையோ அல்லது சர்க்கரை சிரப் சேர்க்கக் கூடாது. ஆரோக்கிய கொழுப்பான எண்ணெய், சனோலா எண் ணெய் பயன்படுத்தலாம். கறி அல்லது பதப்படுத்தப்பட்ட கறி பயன்படுத்தக்கூடாது. சீராக உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாள் ஒன்றுக்கு 30 நிமிஷங்கள் நடைப் பயிற்சி செய்வது அவசியம். மருத்துவர் குறிப்பிடும் மருந்துகளை தவறாது சாப்பிட வேண்டும். கர்ப்ப கால சர்க்கரை நோயைக் கண்டறிய, அரசு மருத்து வமனைகளில் "குளுக்கோஸ் சேலஞ்ச்' பரிசோதனை வசதி உள்ளது.


VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

WANTED STAFF
Proactive and Experienced Travel Desk Executive.
97104 05161

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

KAMU'S AUTHENTIC BRAHMIN KITCHEN PROVIDES
"SAMBAR, RASAM, KOOTU, PORIYAL" FOR LUNCH & S&N INDIAN DELICACY DINNER ITEMS ON DOOR DELIVERY / DIRECT
Collection at Purushotham Nagar, Chromepet on daily/ Monthly basis.
(Small and bulk orders are welcome)
99404 14187

KR CONSTRUCTIONS
ENGINEER & CONTRACTOR
CONSTRUCTION
ARCHITECTURAL PLANS
APPROVALS
RENOVATION
LABOUR CONTRACT
RESIDENTIAL CONSTRUCTION 2450 / SQFT Inclusive OVER HEAD & SEPTIC TANK
80724 99969

WOMEN'S HOSTEL @ CHROMEPET HASTINAPURAM
AK NAGAR NR AGS COLONY
1km from Hastinapuram Bus Stop
2.5km from Railway Station
1km from Vels College
Food and Accommodation
Fully Furnished, Ac, Geyser
With Power Backup
98843 52417
95510 76930

WANTED
MARRIED FEMALE ACCOUNTANT FOR TIMBER IMPORT COMPANY AT CHROMPET WITH KNOWLEDGE OF TALLY, BILLING, GST FILING, TDS, TCS, EXCEL, MS OFFICE AND COMMUNICATION SKILL.
✆ 98846 20066

WANTED
SHIKSHAA MAT.HR.SEC.SCHOOL
Requires dynamic and dedicated teachers for KG, PRIMARY, TGT & PGT with good communication skills, requisite qualifications and experience in all subjects for the year 2026-2027.
No:8,Ponniamman Koil Street,Hasthinapuram, Ch-64
Ph:044-45272506 / 80125 18378
Email: shikshaacareer@gmail.com

WANTED
♦ ADMIN STAFF
Any Degree With Computer knowledge & Fluent In English
♦ TELECALLERS
Any Degree With Fluent In English & Hindhi
Office near by Chromepet bus stand
Age below 40 - Female Candidate Only
SEND THE CV TO THE EMAIL: salam28273@gmail.com
94454 22306 / 97106 86204



குரோம்பேட்டை ஆர்.பி சாலையில் அமைந்துள்ள இந்திய சுவிசேஷ திருச்சபை தேவாலயத்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் தாம்பரம் மாநகராட்சி இடிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதால் பகுதி வாழ் மக்கள் மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் ஒன்று திரண்டு தேவாலயத்தை இடிக்க எதிர்ப்பு தெரிவித்தனர்.இந்த திருச்சபை 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஜெப கூடமாக செயல்பட்டு வந்த திருச்சபை நாளடைவில் விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது பிரம்மாண்ட கட்டிடத்துடன் திருச்சபை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் உரிய அனுமதி இல்லாமல் தேவாலயத்தின் திருச்சபை கட்டமைக்கப்பட்டுள்ளதாக கூறி நீதிமன்றத்தில் விஜயா என்கிற பெண் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கட்டிட அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள இந்த தேவாலய கட்டிடத்தை இடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதனிடையே தேவாலயம் இடிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேவாலயம் இடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிறிஸ்தவ தேவாலயத்தை சேர்ந்தவர்கள் வி.சி.க, த.வெ.க உள்ளிட்ட பல்வேறு நலச்சங்கத்தினர் மற்றும் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். 500க்கும் மேற்பட்டோர் ஆர்.பி சாலையில் குவிந்துள்ளதால் காவல்துறையினர் ஏராளமானோர் குவிக்கப்பட்டுள்ள நிலையில் பரபரப்பு ஏற்பட்டது.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டு பச்சமலை அருள்மிகு ஸ்ரீ அனுசியா தேவி உடன் அத்திரிஸ்வரர் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா சிறப்பாக நடந்தது. சிவனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள் , சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ். திருநீர்மலை பகுதி தி.மு.க.செயலாளர் ஜெயக்குமார் மற்றும் பொதுமக்கள் பலரும் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். மாலை 6 மணி அளவில் மலைக்கோயில் உச்சியில் திருக்கார்த்திகை தீபத்தை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் ஏற்றி வைத்தார் அப்போது சுற்றி இருந்த பக்தர்கள் அரோகரா, அரோகரா அரோகரா கோஷத்தை போட்டுக் கொண்டே வழிபாடு செய்தனர். கொட்டும் மழையிலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது அன்னதானத்தை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் பக்தர்களுக்கு வழங்கினார் விழாவுக்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

## இண்டிகோ விமான ரத்தால் மற்ற விமானங்கள் வசூல் கொள்ளை

மத்திய அரசின் புதிய விதிமுறை காரணமாக விமானிகள் பணிக்கு வராத காரணத்தால் இண்டிகோ விமானம் அதிரடியாக ரத்து செய்யப்பட்டது இதனால் ஏர் இந்தியா, ஸ்பைஸ் ஜெட் நிறுவனங்களின் விமானங்கள் தொடர்ந்து இயங்கி வருவதால், அந்த விமானங்களில் டிக்கெட் கட்டணம் வரலாறு காணாத அளவுக்கு பலமடங்கு உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து கோவை செல்வதற்கு வழக்கமாக ரூ.10 ஆயிரம் வரை மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில், தற்போது ஏர் இந்தியா விமானத்தில் ரூ.55 ஆயிரத்தில் இருந்து ரூ.60 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## மீண்டும் இயங்கத் தொடங்கிய இண்டிகோ விமானங்கள்

சென்னை விமானநிலையத்தில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கின. இண்டிகோ விமான சேவை மீண்டும் தொடங்கியதால் பயணிகள் சற்று நிம்மதி இருப்பினும் அனைத்து விமானங்களும் இயங்க தொடங்கவில்லை; இன்றும் 48 விமானங்கள் ரத்தாகியுள்ளன. விமானிகள் வாரத்தில் 48 நாள் ஓய்வெடுக்க வேண்டும் என்ற விதி காரணமாகவே இந்த பிரச்சனை ஏற்பட்டது தற்போது மத்திய அரசு அந்த விதியை ரத்து செய்துள்ளது.

## புதுவையில் விஜய் பொதுக் கூட்டத்திற்கு அனுமதி

புதுவையில் டிசம்பர் 9இல் நடைபெறும் தவெக பொதுக் கூட்டத்துக்கு அனுமதி அளித்தார் முதல்வர் ரங்கசாமி தலைமைச் செயலகத்தில் முதல்வர் என். ரங்கசாமியை நேரில் சந்தித்த தவெக பொதுச்செயலர் ஆனந்த் பொதுக் கூட்ட அனுமதி கடிதத்தைப் பெற்றுச் சென்றார்.

## ‘தாம்பரம் யு டியூபர்’ வாராகிக்கு குண்டாஸ்

‘யுடியூபர்’ வாராகி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னை தாம் பரத்தை சேர்ந்தவர் வாராகி என்ற கிருஷ் ணகுமார், 51; யு டி யூபர். இவர் மீது, மிரட்டி பணம் பறிப்பது உட்பட 30க்கும் மேற் பட்ட வழக் குகள் உள்ளன. கிருஷ்ணகுமார் சில தினங்களுக்கு முன், பாண்டிபஜார் போலீஸ் நிலைய எல்லையில், வாடகைக்கு சென்று வீட் டின் உரிமையாளரை மிரட்டியதாக கைது செய்யப்பட்டார். தற்போது, சென்னை மாநகர போலீசாரால், குண்டர் தடுப்பு சட்டத்தில், கைது செய்யப்பட்டுள்ளார்.

## வாழைப்பழத்தின் நன்மைகள்



வாழைப்பழம் தமிழர்களின் உணவு பழக்க வழக்கங்களில் பல ஆண்டு காலமாக தொடர்ந்து வரும் ஒன்று. வாழைத் தண்டு, வாழைக்காய், வாழைப்பூ, பழம் என அனைத்தையும் மருத்துவம், உணவு இரண்டிலும் பயன் படுத்துகிறோம். தற்போது மார்க்கெட்டில் பல வகையான வாழைப்பழங்கள் கிடைக்கின்றன. வாழைப் பழம் சாப்பிடும் முன்னர் கவனிக்க வேண்டிய விஷயங்களை பார்ப்போம். அமினோ அமிலங்கள், வைட்டமின் பி6, சி, நார்ச்சத்து, பொட்டாசியம், மெக்னீசியம், மாங்கனீசு போன்ற சத்துக்கள் நிறைந்த பழம் வாழை. மழைக்காலத்தில் வாழைப்பழம் சாப்பிடுவது முற்றிலும் பாதுகாப்பானது மற்றும் பல வழிகளில் உடலுக்கு நல்லது.வாழையை தினமும் சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி, மூளை செயல்பாடு மற்றும் இருதய ஆரோக்கியத்தை அதிகரிக்க உதவுகிறது. அஜீரணம், இருமல் அல்லது ஆஸ்துமாவால் பாதிக்கப்படுபவர்கள் இரவில் வாழைப்பழம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## பருப்பு உருண்டை குழம்பு



தேவையான பொருட்கள் :

உருண்டைக்கு : கடலைப்பருப்பு – 1/4 கப், துவரம் பருப்பு – 3/4 கப், காய்ந்த மிளகாய்– 4, சோம்பு – அரை தேக்கரண்டி, பெரிய வெங்காயம் –2, கறிவேப்பிலை சிறிதளவு.

குழம்பு செய்வதற்கு: நல்லெண்ணெய் – 3 தேக்கரண்டி, சின்ன வெங்காயம்–15, பூண்டு – 10 பல், தக்காளி–2, புளி தேவையான அளவு, மஞ்சள்தூள் சிறிதளவு, குழம்பு தூள்–2 தேக்கரண்டி, வெந்தயம் – அரை தேக்கரண்டி, கடுகு –அரை தேக்கரண்டி, கறிவேப்பிலை சிறிதளவு.

செய்முறை :

முதலில் கடலை பருப்பு, துவரம் பருப்பை சுமார் 1 மணிநேரம் ஊறவைத்து, மிக்ஸியிலிட்டு காய்ந்த மிளகாய், சோம்பு சேர்த்து சிறிது கொரகொரப்பாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். இதனுடன் நறுக்கிய பெரிய வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை, உப்பு சேர்த்து நன்றாக பிசைந்து கொண்டு சிறிய உருண்டைகளாக உருட்டி, இட்லி பாத்திரத்தில் வேகவைத்தபின் தனியே வைக்கவும். ஒரு வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, வெந்தயம் போட்டு தாளித்த பின்னர், கருவேப்பிலை சேர்த்து அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து வதக்கவும். பொன்னிறமாக வந்த பின்னர் தக்காளி சேர்த்து வதக்கவும், தக்காளி வதங்கியதும் கரைத்து வைத்துள்ள புளி சேர்த்து மஞ்சள்தூள், குழம்பு தூள் சேர்க்கவும். நன்றாக கொதி வந்ததும் உருண்டைகளை போட்டு சிறிது நேரம் வேகவிடவும், கடைசியாக அரைத்த தேங்காய் விழுதை சேர்த்து கொத்தமல்லி தழை போட்டு இறக்கினால் சுவையான பருப்பு உருண்டை குழம்பு தயார்.













Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725